திருக்கோவில்களில்
தீந்தமிழ் வளர்ச்சி

●

ஆசிரியர் :

க. முருகையா B. A., L. T.

ஒய்வு பெற்ற தலைமை ஆசிரியர்

அருள் நகர்
மேலக்காவேரி (அ.நி)
கும்பகோணம்-2

●

வெளியீடு :

உலகத் தமிழ்க் கழகம்

தலைமைச் செயலகம்

தனித்தமிழ் வளாகம், பாவாணர் இல்லம்,

56-செல்வராசு நகர், குடந்தை – 612 001.

உரிமை : அச்சகத்தார்க்கு

விலை : உருவா 1-50

அச்சிட்டோர் :
இர. முருகேசன்
அறிவாநந்தர் அச்சகம்,
85-நாகேசுவரன் வடக்கு வீதி, குடந்தை - 612 001.
தொ. பே. எண் : 22707



க. முருகையா B.A; L.T;
ஓய்வு பெற்ற தலைமையாசிரியர்
முன்னாள்
அறநிலையத்துறைப்டணியாளர்,
குடந்தை.

நூன் முகம்

திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே எனக்கு என்னை அறியாத ஒருமொழிப்பற்று; தாய்மொழிப் பற்றுத் தமிழ்மொழிப்பற்று. எதனால்? எப்படி? என்பதற் கெல்லாம் விளக்கம்கூற முடியவில்லை. என் தந்தையாருக்குத் தேவாரத் திருமுறைகளில் சிறிது பற்றுண்டு. அன்னையாருக்கு எழுதப் படிக்க அவ்வளவாகத் தெரியாது. அப்படியிருக்க நான் பத்தாம் வகுப்புக்குச் செல்லும்போது வரலாறு தமிழ் இரண்டையும் விருப்பப் பாடமாக ஏற்றுக்கொண்டேன். எனது குடும்ப ஏழைமை நிலைமையை அறிந்திருந்த தலைமையாசிரியர் எனக்கு அறிவியல் பாடங்கள் இரண்டு (Physics and Chemistry) கொடுத்து அறிவுரையும் சொன்னார்; "வாழ்க்கையில் உதவக்கூடிய பாடங்கள் கொடுத்திருக்கிறேன். நீ அவற்றை விரும்பாதது நன்மை யாகாது" என்றார். இப்போதும் எண்ணிப்பார்க்கிறேன ஏன் அப்படிச் செய்தேன் என்று; வியப்புதான் உண்டாகிறது.

விளக்கம் தெரியவில்லை. அதுமுதல் ஒவ்வொரு நிலையிலும் தமிழின்மீது பற்று வளர்ந்து வந்திருப்பதை உணரமுடிகிறது. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆங்கிலத்துக்குப பதிலாகத் தமிழ்மொழியை விருப்பமாக எடுத்துக்கொண்டேன். கல்லூரியில் பயிற்சிக்குத் தமிழ்மொழி' அவ்வாண்டுதான் வந்துள்ளதாக நினைவு.

ஆசிரியர் சழகத்தில் நடைமுறை, நடவடிக்கைக் குறிப்பு (Minutus Book) இவையெல்லாம் தமிழில் வரவேண்டும் என்று போராடி அதை வழக்கத்துக்கும் கொண்டுவந்தேன். அப்பொழுதுதான், திரு. வி. க.. மறைமலையடிகள், அவர் மகனார் திருநாவுக்கரசு இவர்கள் பழக்கமானார்கள். அடுத்ததாக பண்டாரகர் மு. வ அவர்களுடன், 'Siee' ஸ்ரீ என்பதற்குப் பதிலாகத் 'திரு' என்று பெயர்கள் முன் வழங்கப்படவேண்டும் என்பதற்காகச் சேர்ந்து பல கூட்டங்களில் பேசி, தருக்கமிட்டு வெற்றி கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது.

'எது பேசுந்தமிழ்?' போஜனமாயிற்றா, சாப்பாடு ஆகிவிட்டதா, சோறு தின்னாச்சா என்ற மூன்றில் போஜன ஆயிற்றா' என்பது தான் பேசுந்தமிழ் என்று பண்டாரகர் உ. வே. சா. அவர்கள் கலைமகளில் கட்டுரை எழுதியிருந்தார்கள். திரு. அண்ணாதுரையின் கருத்துக்கு விருந்தாயிற்று. அப்போது அவருடனும் கூட்டங்களில் கலந்து கொள்ள நேரம் கிடைத்தது. பற்றாக்குறைக்கு இந்தி புகுத்தலும், எதிர்ப்பும் எனது வாழ்க்கையில் பங்குகொண்டன இப்படி, தமிழ்ப்பற்று வளரப் பல நிலைகள்.

பிறகு 'விசுவ, இந்து, பரீசத்' மாநாடு மயிலாடுதுறையில் நடந்தது. 'இந்து சமயப் பேரவை' என்று அந்தப் பெயரை மாற்ற திரு. வி. ஆறுமுகம் இ. ஆ. ப. (ஓய்வு) அவர்களுடன் முயற்சி எடுத்தது. ஆனால் வெற்றி இல்லை.

திருவண்ணாமலை, இடும்பாவனம். இங்கு அறநிலையத்துறையில் பணியாற்றியபோது கோவில்களில் ஏன தமிழ் வழங்கப்படுவதில்லை என்ற வினா என் சிந்தனையில் எழுந்தது. இன்னும் அதே சிந்தனைதான். இந்நூலைக் காண்போரும், படிப்போரும், இவ் வியக்கத்தில் ஈடுபட்டு வெற்றியடையச் செய்யவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன.

இது தமிழாசிரியர் கழகத்தின் மூலம் வெளிவர வேண்டும் என்பது என் விருப்பம். தமிழ்மொழியைமாத்திரம் சிறப்பாகக் கற்று அத்தமிழால் உயர்ந்து வாழ்க்கை நடத்தும் தமிழாசிரியர்கள் செய்யவேண்டிய ஒரு சிறந்த தொண்டாக நான் கருதினேன். அதற்காகக் காத்திருந்தேன் 23...1...81 அன்று எனக்கு ஒரு கடிதம் வந்தது. 'தங்கள் கருத்தைத் தமிழாசிரியர் கழகச் செயலர் அவர்களிடம் கூறினேன். முழுமன நிறைவுடன் ஏற்றுக்கொண்டார். இந்தத் திங்களில் கூட்டம் சிறிது தள்ளி நடைபெறும். அதுபோது அதனைத் தீர்மான வடிவில் அரசுக்கு அனுப்புவதுடன். திருககோவில் களில் மறியல் முதலியன செய்தும் ஆக்கம் தேடுவோம் என்று கூறினார். இது கடிதத்தின் சுருக்கம்.

இதுநாள்வரை காத்திருந்தேன். ஒன்றும் பலனில்லை. பண்டாரகர். S. உதயமூர்த்தி தமிழ் ஆசிரியர்களைக் குறை கூறியது சரிதான் என்று நான் இப்போது உணர்கிறேன்.

இறைநிலைக் கொள்கையில் கருத்து மாறுபாடு கொண்டவர் என்றாலும், தாய்த் தமிழ் வளர்ச்சி மீது கொண்ட காதலால் என்னுடைய இப்புத்தக வெளியீட்டு முயற்சியைத் தூண்டியும் துணை நின்றும் ஒத்துழைப்பு நல்கிய குடந்தை நகராட்சி கருப்பூர் சாலைத் தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர் "குடந்தய் குகன்" என்னும் திரு. வய். மு. கும்பலிங்கன் அவர்கட்கும் இந்நூல் சிறக்க

அணிந்துரைகள் வழங்கிச் சிறப்பித்த மதுரை காமராசர் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் **முனைவர் திரு. வ. சுப. மாணிக்கம்** அவர்கட்கும், குடந்தை அரசினர் ஆடவர் கலைக்கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் **பேராசிரியர் திரு. தி. க. சுப்பிரமணியன்** அவர்கட்கும், அரியதொரு இணைந்துரை வழங்கிச் சிறப்பித்த தனித்தமிழ்ப் புலவர் - உலகத்தமிழ்க் கழகப் பொதுச் செயலாளர் **குடந்தை திரு. கதிர் தமிழ்வாணன்** அவர்கட்கும், காலத்தே இந்நூலினை அச்சிட்டுத்தந்து உதவிய பாசப்பண்பாளர் அறிவானந்தர் **திரு. இரா முருகேசன்** அவர்கட்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல், உலகத் தமிழ்க் கழகத்தின் சார்பில் வெளியிடப்படுகிறது. இந்த உலகத் தமிழ்க் கழகம் மறைந்த பேராசிரியர் திரு ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. பல இடங்களில் இதன் கிளைகளும் உள்ளன. ஆண்டுதோறும் பொதுச் செயலாளர் குடந்தை கதிர். தமிழ்வாணன் அவர்களது ஊக்கத்தாலும், விடாமுயற்சியாலும் பல இடங்களில் கூட்டங்களும், விழாக்களும் நடத்தப்படுகின்றன. இசை ஞாயிறு, 'பஞ்சமரபு' நூலாசிரியர் திரு குடந்தை ப. சுந்தரேசனார் அவர்களது நினைவு நாளை ஆண்டுதோறும் விடைத்திங்களில் இக்கழகம் கொண்டாடி வருகிறது. மற்றும் அருள்நெறிக் கழகத்துடன் சேர்ந்து கருவறையினுள் சென்று இறைவழிபாடும் நடத்தியுள்ளது. இவற்றை அறிந்த பெருமகிழ்ச்சியினால், அக்கழகத்தின் சார்பில் இது வெளிவரவேண்டும் என்று விரும்பினேன். பொதுச் செயலாளர் குடந்தை கதிர். தமிழ்வாணனும் மனமிக மகிழ்ந்து ஏற்றுக் கொண்டார்கள். அன்னவர்க்கும் மறுமுறையும் எனது நன்றி.

குடந்தை
15—3—89

அன்பன்
கு. முருகையா

செம்மல் - முதறிஞர் வ. சுப. மாணிக்கம்
தமிழ்வழிக் கல்வியியக்கத் தலைவர்
ம. கா. ப. க., முன்னைத் துணைவேந்தர்.

தொ. பே 2328
கதிரகம்
காரைக்குடி-623 002

25—2—1989

அணிந்துரை

தமிழாசிரியப் பெரியார் திரு. முருகையன் எழுதிய **திருக்கோவில்களில் தீந்தமிழ் வளர்ச்சி** என்ற சிறு படிவ நூல் வரப் பெற்றேன். உண்மையும் உணர்ச்சியும் நெறிப்பாடும் அமையவும் - தமிழ் வளர்ச்சி, தமிழாட்சிகளைத் திராவிடக் கோவில்களில் மீண்டும் உயிர்ப்பிக்கவும் துடிப்போடு எழுதப்பட்டிருப்பதைக் காண்கின்றேன். "அணுவளவும் மொழியுணர்ச்சி நாட்டில் இல்லா ஆத்திகரே, இறையுணர்ச்சி வளர்வதெங்கே?" என்ற ஆசிரியர் கேட்கும் அவல வினா ஒருநாள் விடை காணவேண்டு. இது தமிழ் மக்களின் பொறுப்பு. எவ்வளவு நாள் தமிழ்க் கேவலத்தைத் தாங்குவது?

ஈராண்டுக்கு முன் தில்லையம்பலத்தின்மேல் தமிழ்த் திருமுறைகளை நானும் அன்பர்களும் ஏற்றி இசைக்கச் செய்த போராட்டத்தையும் கிளர்ச்சிகளையும் வெற்றியையும் நாடறியும். இன்னும் தமிழ்ப் போராட்டங்கள் வேண்டும். சைவ மடங்கள் தங்கள் மேற்பார்வையில் இருந்துவரும் கோவில்களிலாவது முதற்கண் தமிழருச்சனைகளைச் செய்யலாமல்லவா? துறவிகட்குக்கூட துணிவில்லையே! திருமுறைகளின் முதன்மையிலும் தெய்வத்தன்மையிலும் நம்பிக்கை இல்லையோ?

ஆசிரியர் முருகையனாரின் நல்லெண்ணம் செயற்படும்; தீந்தமிழ் கோவில் புகு.

அன்பன்,
வ. சுப. மாணிக்கம்.

குடந்தை அரசினர் ஆடவர் கலைக்கல்லூரி
தமிழ்த்துறைத் தலைவர்
பேராசிரியர் திரு. **தி. கு. சுப்பிரமணியன்** அவர்கள்

அணிந்துரை

பேரன்புடைய ஆசிரியர் K. முருகையா B.A L.T, அவர்கள் எழுதிய ''திருக்கோவில்களில் தீந்தமிழ்வளர்ச்சி" என்ற நூல் முழுதும் பழுதற படித்துணர்ந்தேன், உள்ளத்தெழுந்த உணர்-வூற்றுகளை வெளியிடுகிறேன்,

வரலாற்றுணர்வோடு தமிழ்மொழியின் மீது வாஞ்-சையோடு உண்மைகளை, உலகறிய வேண்டும் என்ற ஊக்க உந்துதலோடு வெளியிடப்பட்டுள்ள நூல்

மாற்றார் கருத்துகளையும் மனத்திருத்தி எழுதப்பட்-டது இந்நூல், மாயையில் சிக்கி மயங்கி அழிவுப் பாதையில் அயராது நடைபோடும் தமிழனைத் தடுத்து நிறுத்தி நல்வழி காட்டும் ஓர் அரிய முயற்சி எனப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கோவில்களில்"வடமொழியிலும் பூசை(அர்ச்சனை) செய்யப்படும்" என்ற பலகைகள் இருக்கவேண்டுமே தவிர தமிழிலும் செய்யப்படும், என்ற பெயர்ப்பலகை தமிழ்நாட்டில் இருப்பது கேலி கூத்தாம்- பக்கம் 13. ஒவ்வொரு தமிழனும் உன்ன வேண்டிய - ஒவ்வொரு துறையிலும் செயல்முறை படுத்தவேண்டிய ஒன்று.

நூலாசிரியர் கருத்துகளைச் சைவமும் தமிழும் வளர்ப்பதாகப் பறைசாற்றிக்கொண்டிருக்கும் சைவ மடங்கள் செயல்படுத்த முன் வரவேண்டும்

தமிழ்நாட்டில் தமிழ் ஒலிக்க ஒரு தனிப்பேரியக்கம் கண்டாக வேண்டிய நிலையினை நூலாசிரியர் வெட்கத்-தோடும் வேதனையோடும் தெளிவு படுத்துகிறார்.

சிந்தனையினைத் தூண்டும் - நல்நெறிப்படுத்தும் நல்ல நூல்.

குடந்தை — அன்பன்
1—3—1989 — **தி. கு. சுப்பிரமணியன்**

வாழ்க பாவாணர் புகழ்! வளர்க தனித்தமிழ் நெறி!

பாவாணர்
பைந்தமிழ்த் தொண்டர்
குடந்தை
கதிர். தமிழ்வாணன்,
[உலகத் தமிழ்க் கழகப் பொதுச்
செயலாளர்]
தனித்தமிழ் வளாகம்
" பாவாணர் இல்லம் "
56, செல்வராசு நகர்,
குடந்தை - 612 001.

நாள் : 20—1—19 - 1—2—89

இணைந்துரை

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே".
— திருமூலர்

விழுதகைத் தொண்டுசால் — கெழுதகை நண்பர் திரு. வை. மு. கும்பலிங்கன் அவர்களுடன், குடந்தைவாழ் பெருந்தகையாளரும், ஓய்வு பெற்ற (உயர்நிலைப்பள்ளித்) தலைமை ஆசிரியருமாகிய, திருமிகு. க. முருகையனார் க.இ; ஆ ப; அவர்களைச் சந்தித்தேன்.

"திருநெறிய தெய்வத் தமிழ்த்திரு நாட்டின் திருக் கோவில்களில், தமிழில் மலர் வழிபாடு நடைபெற

வில்லையே! இத்தமிழ்கூறு நல்லுலகில் வாழும் - தெய்வ நம்பிக்கையுடைய - தமிழினப் புலமக்களும்-பொதுமக்களும், யாருக்கும் புரியாத வடமொழியிலன்றோ வழிபாட்டை விரும்பிச் செய்கின்றனர்! இந்நிலை தமிழுக்கும் — தமிழர்க்கும் எத்துணை இழிவானது?" என்னும் தம உள்ளக் குமுறலை வெளிப்படுத்தி, இவ்விழிநிலையகற்றவும், தமிழ் வழிபாட்டை நிலைப்படுத்தவும், **"திருக்கோவில்களில் தீந்தமிழ் வளர்ச்சி"** என்னும் தமது கருத்துத் தொகுப்பு நூலொன்றை வெளியிட விருப்பதாகவும், அதை **உலகத் தமிழ்க் கழகத்தின்** வாயிலாக, வெளியிடல் வேண்டும் என்னும் வேட்கையையும் புலப்படுத்தினார்கள்.

இந்நூலாசிரியரின உளக்கருத்திற்கு இணையாக என்னுரையை. **இணைந்துரை**யாகச் சில சொல்ல விழைகின்றேன்.

"செந்தமிழும் சிவனியமும் செழித்தினிது ஓங்குக!"- என்பதையே என் வாணாள் குறிக்கோளாகக் கொண் டொழுகும் எனது நெஞ்சில், பெரியவர் அவர்களின் கருத்து, மிக ஆழமாகப் பதிந்தது. பைநதமிழ் அறிஞர் பாவாணர் அவர்கள் தமிழ்ச் சமைய நெறியைப் பெரிதும் ஆய்ந்து தமிழர்மதம் எனும் நூலின் வாயிலாக வெளியிட்டுள்ளார்கள். பாவாணரின் பைந்தமிழ்ச் சுவட்டில் என் வாழ்க்கையைப் பதித்துக்கொண்ட நான் அவர்களால் உருவாக்கப் பெற்ற உ. த. க சார்பில் இந்நூல் வெளியிடல் சாலும் என எண்ணி, துணிந்து, இசைந்தேன்."

தமிழர் சமையமும் - வரலாற்று மறைப்பும் :

தமிழர்தம் இன வரலாறு - மொழி வரலாறு - சமைய வரலாறு - பண்பாட்டு வரலாறு ஆகிய நான்கின் தனித்தன்மையை, இற்றைத் தமிழர் முற்றாக அறிந்திலர்.

எந்த இயக்கத்தவரும் இதனை எடுத்தியம்பும் ஆற்றல் அற்றவர்களாகவே உள்ளனர். உண்மையான தமிழ்ச்சமைய நெறியை, ஏற்பாரும் அறிந்திலர்; எதிர்ப்பாரும் அறிந்திலர். "ஆருற்றார்? ஆரயலார்?" என வினவி, அனைவரையும் சமனிலைப்படுத்துகிறது – தமிழர் சமையம்! உண்மை நெறியைக் கூறினால், 'சப்பிரதாயம் (?)' கெட்டுவிட்டது எனப் பிதற்றுகின்றனர் இறைக் கொள்கையர். "ஆகா! மூட நம்பிக்கை புகுந்து விட்டது" எனக் குதிக்கின்றனர் - இறையிலிக் கொள்கையர். உண்மையான கடவுள் கொள்கையும் – உண்மையான பகுத்தறிவுக் கொள்கையும் ஒன்றே என்பதை ஓர்தல் வேண்டும். இவ்வுண்மையை உணராததே இன்றளவும் தமிழின வீழ்ச்சிக்கு அடிப்படையாகும். இதனை உணர்த்துவதே இற்றைத் தமிழின மீட்சிக்கு அடிப்படையானதுமாகும்.

பழந்தமிழ்ச் சமையநெறி :

பல்கலையும் ஆய்ந்தறிந்த தொல்தமிழர் குறிஞ்சி-முல்லை - மருதம் – நெய்தல் என, நிலத்தை நான்காகப் பகுத்தனர். அதனாலேயே இந்நிலவுலகம் - நானிலம் என அழைக்கப்படுகிறது. இவற்றுள், முல்லையும் குறிஞ்சியும் முறைமையுள் திரிந்து வறட்சிப் போக்கால் மாறியபகுதியைப் பாலை என அழைத்தனர். இவ்வைந்நிலத்து மக்களுக்கும் வகுக்கப் பெற்றதே ஐந்திணை வழிபாடு. இவற்றுள்ளும், குறிஞ்சி நிலத்துச் சிவநெறியும், முல்லைநிலத்து மால்நெறியுமே, காலப்போக்கில் சிவனியம் – மாலியம் என்னும் தமிழர் சமையமாக நிலைத்தது. ஆரியக் கலப்பிற்கு முன்பு வரையில், சிவனிய - மாலிய நெறிகளில் வேறுபாடுகள் இல்லை. ஒருடம்பின் இருகண்களைப் போலவும், ஒரு மரத்தின் இருகிளைகளைப் போலவும், ஓரினத்தின் இரு நெறிகளாகவே இருந்தன.

இடைக் காலத்து வந்தேறிகளான ஆரியர் தமிழரிடையே கலந்து, தம்மைப் **'பூசுரர்'** (நிலத்தேவர்) எனவும், தமது மொழியைத் **தேவபாடை** எனவும் கூறி, ' உலகம்-தெய்வத்துள்ளும், தெய்வம்-மந்திரத்துள்ளும், மந்திரம்-பிராமணருள்ளும் அடக்கமாதலால், பிராமணரே தெய்வம்'' - என்னும் பொருள்பட,

''தெய்வா தீனஞ் சத்சர்வம்; மந்த்ரா தீனந் தைவதம்; தன்மந்த்ரம் ப்ராமணா தீனம்; ப்ராமணு மம தைவதம்''

என்று 'சுலோகம்' படைத்து, தம்மைப் பலவாறு உயர்த்திக் கூறி, தமிழர்களின் தனித்தன்மை வாய்ந்த மொழி-கலை-பண்பாடு-சமையம் முதலிய அனைத்துத் துறைகளிலும் தங்களை முதன்மைப்படுத்திக்கொண்டனர்.

இடைக்காலத் தமிழரை அடிமைப்படுத்தவும் - ஆட்கொள்ளவும் - ஆட்டிப்படைக்கவும் ஆரியர் மிகுதியும் காலூன்றி, வாய்ப்பாக அமைத்துக்கொண்ட துறை-சமையத் துறையே ஆகும்.

தமிழர்தம் தமிழ்ச்சமைய நெறிகளின் அடிப்படைகள் அனைத்தையும் ஆரிய மயமாக்கி, அவற்றையே - அற்றைத் தமிழர்களை ஏற்கவும் செய்தனர். எடுத்துக் காட்டாகக் கீழே சிலவற்றை நோக்குவோம்.

'சிவனையும் - திருமாலையும்' அடிப்படையாகக் கொண்ட 'சிவனியம் - மாலியம்' என்பது தமிழ்நெறி. 'வேதத்தை' அடிப்படையாகக் கொண்ட 'வைதீகம்' என்பது ஆரியநெறி. சிவனியம்-மாலியம் என்பதை 'சைவம்' 'வைணவம்' எனத் திரித்து, வைதீகத்தின் மறுதலையாகிய 'இந்துமதம்' - என்னும் போலிப் பெயரில் இணைத்து,

'பிரம்மா-விட்ணு-ருத்ரன்' என்னும் முத்திருமேனி வழி பாட்டைப் புகுத்தி "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும' - என்னும் தமிழ் நெறிக்கு மாறாக, நால் வருணப் பிறப்பு வழி வேறுபாட்டைப் புகுத்தி, 'ஈசுவரன், சுப்ரமண்யம், சுவாமி நாதன், துர்க்கா, ஈசுவரி-லட்சுமி, சரசுவதி போன்ற எண் ணற்றக் கடவுளர் பெயர்களை உருவாக்கி, அவற்றிற்குப் பின்னணியாகப் பலபுராணப் புளுகுக் கதைகளைப் புனைந்து, அவற்றிற்குச் 'சமற்கிருதச் சுலோக' முலாம் பூசி நம்பவைத்து **வடமொழியையே வழிபாட்டு மொழி யாக** நிலைப்படுத்திவிட்டனர். ஏறக்குறைய ஈராயிரம் ஆண்டுகளாக அந்தக் குட்டையிலேயே ஊறித் திளைத்த நம் தமிழின இறைப்பற்றாளர்கள், அந்த அடிமைத்தளையி லிருந்து விடுதலைபெற விழையாமல் கூனிக்குறுகிக் கூண்டுக் கிளியென மாண்டுக் கிடக்கின்றனர்.

இனியொரு விதி செய்வோர் !

திருக்கோவில் வழிபாட்டுக்குச் செல்லும் நாம், தேங்காய், பழம் முதலிய வழிபாட்டுப் பொருட்களுடன் செல்லவேண்டும். ஆனால், வழிபாட்டு (அர்ச்சனைச்) சீட்டு வாங்கக்கூடாது. திருக்கோவிலை முறையாக வலம் வந்து இறையுணர்வோடு கோவிலுக்குள் நுழைந்து -வழிபாட்டுப் பொருட்களைக் குருக்கள்மார்களிடத்தில் கொடுக்காமல்,- கருவறைக்கு முன்பாக நின்று, நம் அருளாளர்களால் பாடி அருளிய திருமுறை, திருவாய் மொழிகளாகிய தீந்தமிழ்த் திருப்பதிகங்களை ஓதி. நாமே தேங்காயை உடைத்து, கற்பூரம் ஏற்றி, ஒளி வழிபாட்டுடன் திரும்பவேண்டும்.

இத்தகைய தன்மான வழிபாட்டு நெறிக்குக் கோவி லுக்குள் எதிர்ப்போ - மறுப்போ - மறைப்போ வருமானால் நம்மில் யாரும் கோவிலுக்குள் செல்லாமல், திருக்கோவிலின் தலைவாயிலில், கோபுரத்தின் அருகில் - வீதியில் நின்ற வண்ணமே இச்செயலை ஊரறிய செய்தல் வேண்டும்.

ஆம், 'விதி' என்ற ஒன்றைக் கூறி நம்மை நம்ப வைத்ததன் அல்லது இன்றுவரை நாம் நம்பி வந்ததன் விளைவு, இப்போது நாம் வீதியில் நிற்க நேரிட்டுள்ளது. "விதி" நீண்டு வீதியாயிற்று!

இத்தகைய அருஞ்செயலை இத்தமிழ்கூறு நல்லுலகின பட்டிகள்தோறும் பரப்பி, மக்கள் இயக்கமாகச் செயற்படுத்துதல் வேண்டும். அப்போதுதான் தமிழகத் திருக்கோவில்களில் தமிழனின் தன்மானம் காக்கப்படும்; தமிழ்வழிபாடு மலர்ச்சி பெறும்.

செத்தமொழியாகிய வடமொழியினால் அர்ச்சிக்கப் பட்டு வழங்கப்பெறும் விபூதி 'தீட்டுப்பட்டது' என்னும் உண்மையை மக்கள் உணர்ந்து அதனை வாங்காமல், தூ மறை பாடும் வாயால் திருமுறைகளைக்கொண்டு ஓதப் பெற்றதும் சூழ்த்த மாமலர் தூவி வழிபட்டதும், மந்திரமாவது மாகிய திருநீற்றைப் பெற்று, நெற்றியில் அணியும் உணர்வைப் பெருக்கவேண்டும்.

"நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும், தன்னை
மென்மேல் உயர்த்தி நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்."

என்னும் பழந்தமிழர் நெறிக்கு ஒப்ப, நம்மை யாரும் உயர்த்த மாட்டார்கள்; நம்மை நாமேதான் உயர்த்திக்கொளல் வேண்டும்.

தமிழனை நாலாந்தரக் குடிமகனாக்கிய 'மநு தர்மத்தை' அடிப்படையாகக் கொண்ட இந்தியத்தின் 'இந்து'ச் சட்டப்படி, தமிழ் வழிபாட்டுரிமையை முறை மன்றங்களின் வாயிலாக நாம் ஒருபோதும் பெறமுடியாது

"இந்த சட்டத்தின்படியே ஆட்சி நடத்துவோம்" என உறுதிமொழி கூறி, ஆட்சிக் கட்டிலில் ஏறும் எந்த ஆட்சியாளரின் மூலமும் நாம் தமிழ் வழிபாட்டுரிமையை அடைய முடியாது.

கண்மூடித்தன மானப்பழமைப் பிடிப்போடு, 'சம்பிரதாயம்' என்னும் போர்வையில் ஒளிந்துகொண்டு, 'சிரீல - சிரீ' களாகவும் 'குருமகா சந்நிதானங்' களாகவும், 'எசமான' சுவாமிகளாகவும் தம்மை வடமொழியில் அறிமுகப் படுத்திக்கொண்டு வாழ்கின்ற நமது தமிழகத் திருமடங்களின் தலைவர்களாலும் தமிழ்மானத்தையோ தமிழன் மானத்தையே மீட்டுத்தர இயலாது.

"போதொடு நீர்சுமந்தேற்றிப் புகுவார் அவர்பின் புகுவேன்" என்று 1300 ஆண்டுகட்கு முன்பே அறப்போர் தொடுத்து, அரும் புரட்சி முழக்கம் செய்த செப்புதற்கரிய ஒப்பிலாமணியாம் அப்பரடிகளின் அடிச்சுவட்டில் சென்று, ''பூவும் புனலும்கொண்டு பூசனை செய்யும்'' பொற்காலத்தை நம் காலத்தில் நாமே உருவாக்க வேண்டும். உரிமை என்பது வேண்டிப் பெறுவதன்று; நாமே விளைவித்துக்கொள்வது! ஒன்றே செய்வோம்! நன்றே செய்வோம்! இன்றே செய்வோம்! இன்னே செய்வோம! தமிழுண்டு! தமிழ் மக்களுண்டு! நாளும் தமிழுக்குச் செய்வோம் நல்ல தொண்டு! மக்களைச் சந்திப்போம்! மக்கள் இயக்கமே மாபெரும் ஆக்கம்! துணிவே துணை! தொண்டே வாழ்வு! இனியொரு விதிசெய்வோம்! அதை எந்த நாளும் காப்போம்!

"செத்தாரை மீட்டுமிங்கே எழுப்பியிடல் வேண்டும்" —என்றார் வள்ளற் பெருமான். வள்ளலார் வாய்மொழியின் படி, 'செத்தார்' — எனப் படுவோராகிய, ஒத்தது அறியாமல் உயிர் வாழ்கின்ற, அறிவும்-உணர்வும் - தன்மானமும் செத்து, ஆரியத்திற்கு அடிமைப்பட்டு, நடமாடும் பிணங்களாக அலைகின்ற தமிழ் மக்களுக்கு மீண்டும் உணர்வூட்டி — அறிவுநெறி கொளுத்தும் அரிய-பெரிய - உரிய முயற்சியில் ஈடுபட்டுள்ள கி. பி. ஏழாம் நூற்றாண்டின் சமையப் புரட்சித் தலைவராக விளங்கிய அருட்பெருந்தகை — அப்பரடிகளின் அகவையையும் — முனைப்பையும் — நினைப்பையும் — துணிவையும் — கனிவையும் — பண்பையும் ஒத்த நம் நூலாசிரியப் பெரியாரின் முயற்சி வெல்க! என வேண்டி, என் இணைப் புரையை—பிணைப்புரையாக்கி, வணங்குகின்றேன்.

வாரீர்! சேரீர்! கேளீர்!

பண்டைய மரபைக் காத்து
பழந்தமிழ் இறைமை பேண
வண்டமிழ்த் தெருக்கள் தோறும்
வழக்காடு மன்றம் காண்போம்?

வழக்கு:- "தமிழகத் திருக்கோவில்களில் வடமொழியில் வழிபாடாற்றுவது குற்றமே"

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும், முதலை
உண்ட பாலனை அழைத்ததும், எலும்பைப் பெண்ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததும், கன்னித்
தண்ட மிழ்ச் சொலோ? மறுபுலச்சொற்களோ? சாற்றீர்!
— திருவருணைக்கலம்பகம்

சொற்கோவின் நற்போற்றித் திருஅகவல்
செந்தமிழில் இருக்கும் போது
கற்கோவில் உட்புறத்தில் கால்வைத்‌து
தெவ்வாறு ''சகச்ர நாமம்"
தெற்கோதும் தேவாரம் திருவாய்நன்
மொழியென்னும் தேனி ருக்கச்
செக்காடும் இரைச்சலென "வேதபா
ராயணம்" ஏன்? திருக்கோ வில்பால். — பாவேந்தர்

மேற்கோள் நூல்கள்

1, தமிழர் மதம் — மொழி ஞாயிறு
ஞா. தேவநேயப் பாவாணர்

2. ,, — தமிழ்க் கடல்
மறைமலையடிகள்

3. தமிழர் சமையம் — தமிழ்க் காசு
கா. சுப்பிரமணியனார்

4. வழிபாட்டில் வல்லாண்மை
சிந்தனைச்செம்மல் கு. ச, ஆநந்தன்

5, ஆலய வழிபாட்டில் தமிழ்
— பண்டாரகர் இரா. தண்டாயுதம்

திருக்கோவில்களில்

தீந்தமிழ் வளர்ச்சி

மொழியுணர்ச்சி பாடுகின்றீர் உணர்ச்சி கூர்ந்து,
மொழியுங்கால் பிழைபொறுத்துச் சிந்தித் தாய்ந்தால்
பழியுணர்ச்சித் தோன்றாது வருவோன் செல்வோன்
பழிக்கின்றான் நம்மொழியைச் செவிம டுத்தும்
எழுமுணர்ச்சிக் கண்டோமா? வடக்கு வேந்தன்
இழித்துரைத்தான் தமிழரசை எனுஞ்சொற் கேட்டு
முழுமூச்சோ(டு) எதிர்த்தானே அவன்கு லத்து
முளைத்துவருங் காளைகள்நாம் வெட்கம், வெட்கம்.

ஆங்கிலமோ பிறமொழியோ பயின்று விட்டால்
அன்னைமொழி பேசுதற்கு நாணு கின்றான்,
தீங்குடைய மனப்போக்கில் வாழு கின்ற
தென்னாட்டில் தென்படுமோ மொழியு ணர்ச்சி?
பாங்குடனே இருக்கும்மொழி தமிழ்தான் என்று
பகர்நாளில் மொழியுணர்ச்சித் தானே தோன்றும்
ஈங்கதற்கா என்செய்யப் போகின் றீர்நீர்?
இளைஞரினி விழித்தெழுந்தால் விடிவு தோன்றும்.

ஆந்திரமும் கன்னடமும் சென்று வந்தேன்
அங்கெல்லாம் மொழியுணர்ச்சி விளங்கக் கண்டேன்
மாந்தரெனத் திரிகின்றோம் உணர்ச்சி யற்று!
வந்தவர்க்கும் போனவர்க்கும் பல்லைக் காட்டிச்
சாந்துணையும், காற்கைபிடித் தலைந்து நின்று
சாப்பாடே குறிக்கோளாய் மொழியைத் தாழ்த்தி
வாழ்ந்திருக்க நினைக்கின்றோம் படைநடுத்து
வந்தமொழி வாழவழி செய்துத் தந்தோம்.

பிறமொழியை வெறுக்கின்றேன் என்று சொல்லிப்
பிழையாகக் கருதாதீர் தமிழை யிங்கு
மறுவறநன் குணர்ந்ததற்பின் பயில்க என்பேன்.
மனைவியை மற்றொருவன்பால் அடகு வைத்துத்
துறவறமேற் கொள்ளலாமோ? தாய்த வித்துத்
துடித்திருக்க அறஞ்செய்ய முனைதல் நன்றோ?
கறவையிடம் பால்கறந்துக் கன்றுக் கின்றிக்
கதறி விடக் கடவுளென்று சிந்தல் நன்றோ?

மறுமலர்ச்சி எனும்பெயரால் தமிழப் பண்பை
மாய்க்கின்றோம் மொழியிருக்க 'பாஷை' என்போம்
'பெறுமகிழ்ச்சி' சந்தோஷம்ஆகும், வேட்டி
வேஷ்டி எனப் பெயர்மாறும் பதற்றம் என்னோம்
மறுமொழிபோல் பதஷ்டமெனக் குறிப்போம் தண்ணீர்
'ஜல'மாகும், மறைக்காடு வேதாரண்யம்
பிறமொழியாய் மாறிவிடும், மொழியு ணர்ச்சிப்,
பிழைத்திருக்க இடமுண்டோ? புதைத்து விட்டோம்!

மணவினையில் தமிழுண்டோ. பயின்றார் தம்முன்
வாய்ப்பேச்சில் தமிழுண்டோ. மாண்ட பின்னர்
பிணவினையில் தமிழுண்டோ? ஆவணத்தில்
பிழையோடு தமிழுண்டு. கோவில் சென்றால்
கணகணவென் றொலியுண்டு, தமிழைக் கேட்கக்
கடவுளரும் கூசிடுவர்: அந்தோ! அந்தோ!
அணுவளவும் மொழியுணர்ச்சி நாட்டில் யில்லா
ஆத்திகரே! இறையுணர்ச்சி வளர்வ தெங்கே?

வள்ளலாரின் மொழிப்பற்று. (உரைடப்பகுதி பக்கம் 451) "இடம்பத்தையும் ஆரவாரத்தையும் பிரயாசத்தையும். பொது மறைப்பையும்போது போக்கையும் உண்டு பண்ணுகின்ற ஆரியம் முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்ல வொட்டாது பயிலுதற்கும்; அறிதற்கும், மிகவும் மிலேசை யுடையதாய்ப் பாடுதற்கும் துதிப்பதற்கும் மிகவும் இனிமை யுடையதாய்ச், சாகாக் கல்வியை இலேசில் அறிவிப்பதாய்த்

திருவருள் வலத்தாற் கிடைத்த தென்மொழி யொன்றிடத்தே மனம்பற்றச் செய்து அத்தோய்திரப் பாட்டுகளைப் பாடு வித்திருளினீர்."

திரு. வி. க. வும் இலங்கை இளைஞர் மாநாட்டிலும் மதுரையிலும் கோவில்களில் வழிபாட்டுக்கு ஆரியம், தமிழ் இரு மொழிகளிலும் வழங்கப்படுதல் வேண்டும் என்று வற்புறுத்திச் சென்றுள்ளார்.

சில ஆண்டுகளுக்கு முன் கோவில்களில் அர்ச்சனை தமிழில் செய்யப்படுதல் வேண்டும் என்ற சட்டம் தமிழ்நாடு சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது. அதன் தொடர்பாகக் கோவில்களில் "தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும்" என்ற பலகை மாட்டப்பட்டிருந்தது. தமிழில் அர்ச்சனை செய்யுங்கள் என்று கேட்டால் அதற்கு குருமார்கள் செவி சாய்ப்பதில்லை அவர்களுக்குத் தமிழ்ப் பற்று கொஞ்சமும் இல்லை என்பதை அவர்களது செயல் காண்பித்துவிடுகிறது.

சட்டம் இயற்றப்பட்டவுடன் தருமை ஆதீனம் தமிழ் அர்ச்சனை என்ற நூல் ஒன்றை வெளியிட்டுள்ளது அதன்படி அவர்களது மேற்பார்வையில் உள்ள கோவில்களில்கூட அது நடைபெறுவதில்லை. "சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குக" என்ற முழக்கம் மாத்திரம் முழங்குவார்கள்.

மற்றும் குன்றக்குடி அடிகளார் அவர்களது கோவில்களில் தமிழ் அர்ச்சனைசெய்துவழிகாட்டியாக நிற்கிறார்கள். தமிழ் அர்ச்சனைகளாகச்சிறிய பொத்தகம் வெளியிட்டு உள்ளார்கள். இவையன்றி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகமும் தமிழ் அர்ச்சனை நூல் ஒன்று வெளியிட்டுள்ளது புதுவை அரசும் கூட இதற்காக அர்ச்சனைத் தொகுப்பு நூலைவெளியிட்டுள்ளது.

இவைகளில் எதுவுமே கோவில்களில் உள்ள நூல் நிலையங்களில்கூட பெரும் பாலும் காணப்படுவதில்லை.

ஒரு சமயம் எங்கள் ஊர் கோவிலுக்குத்தருமை ஆதீனகர்த்தர் வழிபாட்டுக்காக வந்திருந்தார்கள். அவர்களைத் தமிழ் அர்ச்சனையைத் தொடங்கி வைக்குமாறு கேட்டுக்கொண்டோம். அதற்கு அவர்கள் சமற்கிருதத்தில் சொன்னால் புரியவில்லையா? என்று கேட்டுவிட்டுப் போய்விட்டார்களே தவிர தொடங்கி வைக்கவில்லை. பிறகு ஊரிலுள்ளோர்களே தொடங்கி வைத்தோம். இதுபோல் நெடுங்காடு முதலிய ஊர்களில் தமிழ் அர்ச்சனை நடத்திக் காண்பித்துள்ளோம்.)

கிராமங்களிலுள்ள அம்பாள் கோவில்களுக்காக 108 போற்றிகளை அபிராமி அந்தாதி முதலிய நூல்களிலிருந்து தொகுத்துப் பூசாரிகளுக்கு வழங்கியுள்ளோம்.

(அந்த பட்டறிவுகளிலிருந்து நாங்கள் கண்டு கொண்டது முக்கியமானது ஒன்று உண்டு. பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை என்பதை நாம் அறிந்திருந்தும் குருக்கள்களை நாம் ஏழைமை நிலையில் வைத்துள்ளோம். தமிழ் அர்ச்சனை செய்கிற குருக்கள்மார்களுக்கெல்லாம் சம்பளத்தைக் கூட்டி தனி வருவாயாகக் கொடுத்தோமேயானால் நிச்சயம் தமிழ் அர்ச்சனை வளரும். மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார் தமிழிலேயே எல்லாவித வழிபாடுகளையும் செய்து வருவது போற்றத் தக்கது. குருக்கள்மார்களுக்கும் அவ்வித உணர்வு இருக்கவேண்டும் தமிழ் உதவி புரியும்.)

(பழமையில், நாயன்மார்களும், ஆழ்வார்களும், தமிழ், வழிபாட்டால் அருஞ்செயல்களை நிகழ்த்திக் காட்டவில்லையா? இன்றைய தினமும் மருவத்தூர் அடிகளார் தமிழ் வழிபாடுகள் செய்வித்து அருஞ்செயல்கள் நிகழ்த்திவரவில்லையா? அப்படியிருக்க பொதுமக்கள் தமிழ் அர்ச்சனையில் மனத்தைச் செலுத்த ஊக்கங்காட்டாமல், தேங்காய்த் தட்டைக் கொடுத்துவிட்டுத் நமது கதைகளைப் பேசிக் கொண்டிருக்கிறோம். கடைசியில் தேங்காய்த் தட்டையும் திருநீற்றையோ, துளசித் தண்ணீரையோ கொடுத்துவிட நாம் வாங்கிக் கொண்டு தட்டில்

கொஞ்சம் வெள்ளிக் காசுகளைப் போட்டு வந்துவிடுகிறோம் இது சரியா? சிந்தித்துப் பாருங்கள். 'அரசுத்துறையின் தமிழ் வளர்ச்சிக் கழகமும் இதைக் கவனித்து ஆவன செய்யுமாக!.

ம. பெர். சி, கி. வா. ச., கி. ஆ பெ. விசுவநாதன் அ. ச. ஞானசம்பந்தம். தமிழ்ப் பல்கலைக் கழகத்தார் ஆகியவர்கள் இவைகளில் அதிக அக்கறை காண்பிப்பார்களேயானால் மக்களுக்கும் மொழிக்கும் நல்ல தொண்டு செய்து வருவது இன்னும் புகழைத் தரும். மக்களின் தீய பழக்க வழக்கங்கள் குறைய, தமிழ் அர்ச்சனை முறை நல்லதொருவழியாகும்.

வழிபாடுகளில் மரபுகள் வேறுபாடுகள்

இந்தியர்களுக்குள் உருவ வழிபாடுதான் முதன்மை இடம் பெறுகிறது அத்துடன் ஒளிவழிபாடு பஞ்சபூதங்கள் வழிபாடுஇவையும் நிலவி வருகின்றன, உருவ வழிபாட்டில் இறைவனை மந்திரமூலம் உருவங்களில் அமைக்கிறோம. அந்த உருவங்களை யெல்லாம் நீராட்டுகிறோம்; பல பொருள்களை ஈகம் செய்கிறோம் என்ற கருத்தில் நீராட்டுதலின் மூலம் இறைவனுக்குப் படைக்கின்றோம். அளிக்கின்றோம். இங்கேயும் சிவன் கோவில்களுக்கும், பெருமாள் கோவில்களுக்கும வேறுபாடு. சிவன் விட்டுணு (விஷ்ணு) அலங்காரப் பிரியா என்பார்கள். சிவனுக்குத் தினமும நீராட்டு, வைணவருக்கு சில தினங்களில் மட்டும் நீராட்டு மந்திரங்களும் வேறு வேறு, கோவில்களில் விழாக் காலங்களில் வேதம், திருமுறைகள் ஓதிக்கொண்டு செல்லுதல் உண்டு. சிவன் வீதி உலாவில் வேதம திருமுறைகள் ஓதுபவர்கள் சுவாமிக்குப் பின்னால் செல்வார்கள், திருமால் வீதி உலாவில் திருமாலுக்கு முன்னால் வேதமும. திருவாய் மொழியும் ஓதிக்கொண்டு செல்லுவார்கள்.

ஏறுபடி காலங்களிலும், விழாக்காலங்களிலும் தீபாராதனைக்குப் பிறகு நால் வேதங்கள் ஓதப் பெறும். பிறகு

திருமுறை, ஓதுதல்: முடிவில் வாழ்த்து அல்லது ஆசீர்வாதம் சிலவிடங்களில் வாழ்த்து அல்லது ஆசீர்வாதம் முடிந்து திருமுறை அல்லது திராவிட வேதம் ஓதுதல். தருமபுர ஆனதீக் கோவில்களில் முதலில் சொல்லியபடி வாழ்த்துக்கு முந்தி திராவிட வேதம் திருவாவடுதுறை ஆதீனக் கோவில்களில் வாழ்த்துக்குப் பிறகு தேவாரம் அல்லது திராவிட வேதம்) இது எலலாம மரபாம் இதைப் போல் வட மொழியில் அர்ச்சனை மரபாம். தமிழ் அர்ச்சனை மரபில்லையாம்.

நாயன்மார்கள், ஆழ்வார்கள் காலத்தில் போற்றித் திருவகவல், போற்றித் திருத்தாண்டகம், இவை போன்ற தோத்திரப் பாடல்கள் எழுந்தது எதற்காக? எந்தக் காரணத்தை முன்னிட்டு தமிழ் வழிபாட்டு முறையும் புத்துயிர் பெற்றது? மற்றும் கிராமத்திலுள்ள சிறு கோவில்களில் பூசாரி எந்த மொழியில் வழிபாடு செய்கிறார்? கிறித்துவர்கள் அந்தந்த மாநில மொழிகளிலேயே தான் வழிபாடு நடத்துகிறார்கள். 'பொதுமக்களை' இருட்டிலேயே வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணங் கொண்டவர்கள்தாம தெரியாத மொழியில் வழிபாடு செய்கிறார்கள்.

நியதி

வரவாற்று நியதிப்படி மக்களின் அறிவு வளர்ச்சி பெறும்போது மாற்றம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. 'மாற்றமாம் வையகம்' அல்லவா! உலகின் நாடுகள் அனைத்துக்கும் இது பொருந்தும. காலச் சக்கரம் சுழல்கிறது. அறம் மறம் குறைவு, நிறைவு; உயர்வு தாழ்வு. வளர்ச்சி தளர்ச்சி; ஏற்றம் இறக்கம் இவை மாறி மாறி வருவது வரலாற்று நியதி அதன்படி சங்க காலம் தமிழுக்குப் பொற்காலம் பிறகு வடவரின் படையெடுப்பால், பண்பாட்டுக் கலப்பால் மொழிப்பற்று மங்குங்காலம். புத்தசமணர்களால் மங்கிய பற்று, நாயன்மார்கள் ஆழ்வார்கள், மற்ற புலவர்கள் இவர்களால் இடைக் காலத்தில் தமிழ் புத்துயிர் பெற்றது பல்லவர்கள் காலத்துக்குப் பிறகு ஏற்றம் பெற்ற தமிழில் திசைச் சொற்கள் அதிகம் நுழைந்

தன. இப்போது அதன் பயனாகச் சில கல்வெட்டுகள் மொழி நமக்கு புரிவது கடினமாக உள்ளது மணிப்பிரவாளம் வந்தது. முகமதியர்கள். ஆங்கிலேயர்கள் இவர்களால் தமிழுக்கு ஆக்கமா வரும்? நினைத்தால் துக்கமே வரும். இத்தாழ்நிலை யிலே தான் தமிழ் நாட்டில் வள்ளலார் தோன்றினார். அவரது தமிழ் நடையின் சிறப்பியல்பை அவர்களது உரை நடைப் பகுதியில் காணலாம். வடமொழிக் கலப்பு மிகவும் அதிகம். பாரதியார் காலம் தமிழ் ஏற்றம் பெற்ற காலம். தூய நற்றமிழுக்கு மறைமலையடிகளும், திரு. வி. க. வும் தோன்றினார்கள். இவர்கள் எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்! என்பதனைக்காண விழைந்தார்கள். திரு அண்ணாத்துரை அதற்கு வழிவகுத்தார்கள். திரு கி. ஆ. பெ. விசுவநாதன் இரா. பி. சேதுப்பிள்ளை, சோமசுந்தரப் பாரதியார் இவர்கள் அனைவரும் ஆதரவு தந்தார்கள். அதன் பயனாகத் தமிழ் ஆட்சி மொழியாயிற்று; கல்வி பயிற்று மொழி ஆயிற்று. ஆனால் வழிபாட்டு மொழி ஆகவில்லை. ஆகவே நாயன் மார்களும் ஆழ்வார்களும், மறுபிறப்பெடுக்க வேண்டுமா? தற்போது குன்றக்குடி அடிகளார் அவர்கள் 'மடைப்பள்ளி ஆட்சி ஒழிய வேண்டும்' என்று அறைகூவிக் கொண்டிருக் கிறார்கள். சமூகத்தின் மேல் மட்டத்தில் உள்ளவர்கள் இதற் குப் பொறுப்பேற்க வேண்டும். அரசியல் சீர்திருத்தவாதிகள் திரு பெரியாரும், அண்ணாத்துரையும் ஏற்படுத்திக் கொடுத்த சமூக சூழ்நிலையைத் தொடர்ந்து நிலைபெறச் செய்ய முயற் சியில் தயக்கம் காட்டக் கூடாது. பெரும்பாலும் பத்திரிகை கள் இதைச் செய்ய வேண்டும் ஆனால், அவை அதிகமாக மேல்மட்டத்தில் உள்ளவர்கள் கையில் உள்ளன. அவை மக்களின் மனத்தைத் திசைத்திருப்பி வருகின்றன புத்தராலும் சமணராலும், வள்ளலாராலும் மறைந்து வந்த, மறைந்து வரு கின்ற மதச் சடங்குகள், கண்மூடிப் பழக்க வழக்கங்கள் மறு படியும் மலிந்து வருகின்றன. இதைத் தடுக்க தமிழ் வழிபாட்டு முறை வளர வேண்டும்; மலர வேண்டும் வாழ்க வள்ளலார் வழிபாட்டு முறை!

தமிழ்த் தாயின் கனவு:

தமிழும் வழிபாட்டில் இடம் பெற வேண்டும் என்பது தான். வடமொழியை நீக்கவேண்டும்என்பதில்லை. பெரிய பெரியக் கோவில்களில் ஆறுகாலங்கள் நடைபெறுகின்றன. இரண்டு காலங்களையாவது தமிழ் மூலமே பூசை முறை செய்ய முயலுதல் வேண்டும். தமிழர் பேரவைப் பேரறிஞர்கள் கூடி வழிபாட்டு முறையைக் கிராமங்களில் பூசை செய்கின்ற பூசாரிகள் மற்றும் குருக்கள்மார்களுக்குக் கற்றுத்தர தமிழ் வேத நூல்களிலிருந்து வகுத்தும் தொகுத்தும தரவேண்டும். சமய நூலகளும், திருவாய்மொழியும், திருமுறைகளும், விதி முறைகளையும், சொற்களையும் அள்ளித்தரக் காத்துக் கொண்டிருக்கின்றன. பொதுவாக பொதுமக்கள் இதில் மனம் வைக்க வேண்டும். அக்கறை காட்டவேண்டும். முத லாவதாக அர்ச்சனையைத் தமிழில் செய்யச் சொல்லுங்கள் நீங்களே புத்தகத்தை வைத்துக் கொண்டாவது 108 சமிழ் மந்திரங்களைச் சொல்லி வழிபடுங்கள்; அஃதே தொடக்கம.

தமிழ் பூசனை

பகுதி-2

வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணை யாகத் தென்மொழியை அருளினான் இறைவன் வடகலை யும் தென்கலையும் மூவாண்டில் கற்றுணர்ந்த திருஞான சம்பந்தர், குருவாயிலாகக் கற்ற மாணிக்கவாசகர் இவர்கள் பாடியது தமிழிலா அல்லது வேறு மொழியிலா?(உயர்ந்த நிலையில் நின்று கேட்கும் கேள்வியல்ல இது. எந்தமொழி யில் என்பது அவரது திருவாசகமே சொல்லும். சுந்தரர் யார்? அவரது மொழி என்ன? தமிழிலேயே இம்மூவரும் திருமுறை களை யாத்தனர். அவர்களது வடமொழி நூல் ஏதாவது உண்டா? அவர் காலத்தில் வடமொழி மறைந்திருந்ததா? நாட்டைவிட்டு ஓடிவிட்டார்களா? அவர்கள் வழியில் குருக்கள்மார் செல்லக்கூடாதா?

பண்டாரகர் மு.வ. "தம்பிக்கு", "நண்பர்கள்" முதலி யவர்களுக்கு எழுதிய கடிதங்கள்" என்ற எல்லா கட்டுரை களிலும் "வடமொழியில் ஆடம்பரத்திற்கு வழிபாடுகள் நடத்தப் பெறுகின்றன. தாழ்மையுணர்வை காட்டுகின்றன" என்றெல்லாம் குறைபட்டுக் கொள்கின்றார்.

திரு. வி. க., சச்சிதானந்தம் பிள்ளை, செங்கல்வ ராய முதலியார் மற்றும் சில பெரியவர்களுடன் வட திரு முல்லை வாசலுக்கு வழிபாட்டுக்குச் சென்றிருந்தோம். வட மொழி அர்ச்சனைக்குக் கொடுக்கவில்லை. நாங்கள் சிவ புராணம் முதலியன ஓதி வலம் வந்து வழிபாடும் நடத்தி னோம். விசுவ கிந்து பரிசத் கூட வடமொழியைக் கட் டாயமாகக் கொள்ளவில்லை. தருமையில் சில ஆண்டு களுக்கு முன் (1980 என்று நினைவு) பயிற்சி வகுப்பை நடத் தியது. எங்கள் ஊருக்கு ஒரு பகுதியினர் வந்தனர். மாலை வழிபாடு நடத்தினோம் எல்லாம் தமிழிலும் சொன்னோம். இந்தியிலும் பாடினார்கள் இறைவனுக்கு நானே மாலை அணிவித்து கற்பூரம் வழிபாடும் நடத்தினேன். (கடவுள் சினந்து கொண்டாரா?)

தமிழுக்கு வாழ்வு கொடுத்தால் வடமொழி தாழ்ந்து விடுமா? சம்பந்தரது பூணூல் அணி விழாவில் எல்லா மந்திரங் களுக்கும் பிறப்பிடம் 'நமச்சிவாய' என்னும் முழு மந்திரமே ஆகையால் அதை ஒலித்தே அவர் பூணூல் அணிந்து கொண்டார் என்பது வரலாறு. அதைப் போலவே திருமண மும் நிகழ்ந்தது. நமசிவாய மந்திரத்தை செபித்த வண்ணம் அக்கினியில் கலந்தார் என்பது உண்மை தானே! அதனால் வடசொல் வீழ்ந்து விட்டதா?

அண்மையில் கர்நாடகத்தில் தமிழர்கள் வாழும்பகுதி யில் உள்ள கிறித்துவராலயத்தில் தமிழில் வழிபாடு செய்யப் பட வேண்டும் என்ற பாதிரியாரை எதிர்த்து கலகமும் செய் தார்கள் கன்னடவர்கள். அரசு அதற்கு ஆதரவு தரவில்லை. ஆகவே அங்கு தமிழில்தான் இப்போது வழிபாடு நடக்கிறது.

முகம்மதியர்கள் மத்தியிலும்கூட. தென்மாவட்டங்களில் தமிழ் மொழி வழங்கப்படல் வேண்டும் என்ற கிளர்ச்சி செய்து ஒரு சில இடங்களில் அது நடைபெறுவதாகக் கேள்வியுறுகிறோம்.

மெய்கண்டாரின் சிவஞான போதம் சைவ சமையத்துக்கு ஒரு மறுமலர்ச்சியைக் காட்டுகிறது புத்த சைன மதங்கள் உண்டாகக் காரணம் பொதுமக்களின் ஆரியர்களுடைய போக்கைக் கண்ட உணர்ச்சிப் பெருக்கே. அச்சமையங்களின் கொள்கைகளும், ஒழுக்க முறைகளும் மக்கள் மனத்தைக் கவர்ந்தன. அவை நாடு முழுவதும் பரவின. அவர்களைப் பின்பற்றியே கோவில்களும், மடங்களும் இந்து மதத்தில் தோன்றின மறுபடியும் அவை வீழ்ச்சியுறாமல் தடுக்க வேண்டுமானால் அவரவர்கள் மொழியிலே வழிபாடு வர வேண்டும்.

மகாராட்டிர மாநிலத்தில் குடியேறிய தமிழ் அந்தணர்கள் இப்பொழுதும் திராவிட அந்தணர்கள் என்றே அழைக்கப்படுகிறார்கள் ஆனால் அவர்களுடைய தாய்மொழியான தமிழ் மறக்கப்பட்டு விட்டது. அஃதே போல் இன்னும் ஒரிசா மாநிலங்களில் கூட இதே நிலைமையுள்ளது. ஆனால் தமிழ் நாட்டில் வேற்றிடத்தவர்கள் வரவேற்கப்பட்டு அவர்களது தொன்று தொட்ட பழக்க வழக்கங்களுடன் வாழ்ந்து வர இடங்கொடுத்திருக்கிறோம். மற்றும் வாழ்க்கைத் தரத்திலும் முதன்மை, கோவில்களிலும் முதன்மையிடம் பொது வழிபாட்டிடங்களிலும் முதலிடம், சில ஆண்டுகளுக்கு முன் திருவண்ணாமலையில் நடந்த நிகழ்ச்சி இங்கே நினைவுகூரத்தக்கது.

இறை வழிபாடு நடைபெற்றுக்கொண்டிருந்த போது மாலை வேளை, இரு பிறப்பாளர்களும் அவர்களது முன்னுல் சுமங்கலிகளும் அர்த்த மகாமண்டபம் இவைகளில் நுழைய தங்களுக்குத்தான் உரிமை உண்டு என்று வாதாடி மற்றவர்களுக்கு வெளியில் இருந்துகூட சுவாமியைப் பார்த்து தரிசனம செய்ய முடியாதபடி வழியை அடைத்துக்கொண்டு

நின்றார்கள். இத்தாழ்மையுணர்வை மற்றவர்கள் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஆகையால் நிர்வாகிகள் கருவறைக் குள்ளும், அடுத்த அர்த்த மண்டபத்திற்குள்ளும் பணி செய்வோரைத் தவிர எவரும் போகக்கூடாதென்று தடுத்து விட்டார்கள். இரு பிறப்பாளர்கள் தங்களுக்குத் தனி உரிமை யுண்டு என்று சீறி நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார்கள். ஆனால் வெற்றி பெறவில்லை. "பிறப்பொக்கும எல்லா உயிர்க்கும்" இப்படி பல வகையிலும் அறிவொன்றே தெய்வம் உண்டு. என்ற பாரதியார் வாக்கை அறியாத இரண்டாம் நிலை அறிவுடைய மக்களைப்பலவிதமாக மனத்தை மயக்குவிக்கும் வேத மந்திரங்கள், வேள்விகள், சடங்குகள் இவைகளைச் செய்து சமூகத்தில் முதலிடத்தைப் பெற்று வருகிறார்கள். இந்து மதம் என்று சொல்லி இந்தியர்களுக் குள்ளே வேற்றுமையுணர்வை விதைக்கின்றனர்.

மணிவாசகனார் இயற்றிய திருவாசகம் கனகசபை மேடையில் ஓதப் பெறக்கூடாதாம். மேடைமீது இருந்து கொண்டு தமிழில்தானே பேசுகிறார்கள்.! பிறகு ஏன் அங்கு ஓதுவதில்லை.? சிவபெருமான் கையெழுத் திட்டதற்கு அவரைப் பழிவாங்குவதற்காகவா ? படிப்பவர்கள் உண ரட்டும்! இவைகளைக் கண்ட வள்ளலார் மனம் புழுங்கினார். வடலூரில் சிற்சபையை விளங்கச்செய்துவிட்டார் தாயுமான சுவாமிகளின் பரவெளி வழிபாட்டு முறையை மேற் கொண்டார்.இராமகிருட்டினரும்,வள்ளலாரும்ஏககாலத்தவர். ஒருசில ஆண்டுகள்தான் வித்தியாசம். வடக்கே இராசாராம் மோகன்ராயின் பிரம்ம சமாசக் கோட்பாடு வள்ளலாருக்கு வழிகாட்டி எனலாம். ஆரிய சமாசம் அப்படி இல்லை.

பெரியாரது நூல்கள் இப்பொழுது அவரது உண்மைக் கருத்துகளை வெளிப்படுத்தி இருக்கின்றன. உலகை ஓர் ஆற்றல் இயக்கி வருகிறது என்பதை ஒப்புக்கொண்டவர். அவர் ஆத்திரமும், வெறுப்பும் அவரை அளவு கடந்து பேசச் செய்தது. சமயத்தின் பெயரால் பிழைப்பு நடத்தும அனை வரு மாத்திரமே அவரை நாத்திகர் என்றழைத்தனர். செய

காந்தன் ஆத்தி உடையவன் . ஆத்திகன்; இல்லாதவன் நாத்திகன் என்ற உண்மைக் கருத்தை உணர்ந்தவர்களில் சிறந்த ஒருவர் உண்மையை அறிந்ததனால் இந்த தலைமுறை வாக்காளர்கள் தமிழர்களை ஆட்சியில் அமர்த்தினார்கள் ஆனால் வருகிற தலை முறையினரின் மதியை மறுபடியும் மதச் சடங்குகளினால் மயக்கிவருகிறார்கள். ஆகவே அண்ணாத்துரையின் அறிவுரை களை ஆட்சிமுறையை வலுப்படுத்த வேண்டுமானால் தமிழ் வழிபாட்டு மொழியாக வேண்டும். இன்றேல் பண்டாரகர் மு.வ. திரு வி க. இவர்களை இழந்தவர்களாவோம். மறைமலை அடிகளை மறந்த பழி சேரும்.

அறிவு வடிவென்று அறியாத என்னை
    அறிவு வடிவென்று அருளினான் நந்தி
அறிவு வடிவென்று அருளால் அறிந்தபின்
    அறிவு வடிவாய் அமர்ந்திருந் தேனே.

செயல்முறை

"மெய்ம்மையாம் உழவைச் செய்து
    விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
    பொறையெனும் நீரைப் பாய்ச்சி,
தம்மையும் நோக்கிக் கண்டுத்
    தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்பா ராகில்
    சிவகதி விளையு மன்றே"

ஆகவே முதலில் நமது அறிவு விளக்கம் (அப்பர் அடிகள்) பெற நாம் முயலவேண்டும். அதற்குக் கல்விதேவை, கல்விக்கு மொழியறிவு தேவை. ஆகவே மொழியை வளர்ப்பதில் நாம் அக்கரை கொள்ளவேண்டும். 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்று முழங்கினால் மட்டும் போதாது. எந்தெந்த இடத்தில் இன்னும் தமிழ் வழங்கப்படவில்லை என்று அறியவேண்டும். அந்த நிலைக்கு காரணம் யார்? அல்லது எது? என்று அறியவேண்டும். இடையூறாக

இருப்பவர்களைக்கண்டு அவர்களுடன் ஆய்வு செய்ய வேண்டும். அவர்களிடம் முரண்பாடுகள் இருக்கமுடியாது. தமிழ்நாட்டில் தமிழுக்கு முதலிடம்.மக்களுக்குத் தெரிந்தமொழி தமிழ், திருநெறிய தமிழ், அறிவுத் தமிழ், தெய்வத் தமிழ், மந்திரமும், தந்திரமும் ஆனமொழி இப்படி இருக்க, வேற்று மொழியைக் கொள்வானேன்? ஏமாற்றத்தானே? இல்லை யென்றால் தமிழிலும் பூசை, குடமுழுக்கு முதலியவற்றைச் செய்து பார்க்கலாமே; வடலூரிலும், மேல்மருவத்தூரிலும் நடைபெறுவதைப்போல விரும்புகிறவர்களுக்கு வடமொழி யிலும பூசை அர்ச்சனை செய்யப்படும் என்ற பலகைகள் இருக்கவேண்டுமே தவிர 'தமிழிலும் செய்யப்படும்' என்ற பெயர்ப்பலகை 'தமிழ் நாட்டில்' இருப்பது கேலிக் கூத்தாகி விடக்கூடாது

அறிவு விளக்கம் பெற்றோர் எதிலும் வேறுபாடு காணமாட்டார்கள் சாதி, சமயம், மொழி. பொருள், பண்பாடு இவைகளில் உயர்வு, தாழ்வு காணமாட்டார்கள். செல்வம் கொழிக்கும் கோவில், வறுமையில் வாடும் கோவில் என்பது அவர்களுக்கில்லை. அவர்கள் நமக்கு வழிகாட்டி. ஆழ்வார்கள் நாயன்மார்கள்தாம் அவர்கள். (வைணவ) மாலியத் தென் கலைக் கோவில்களில் தமிழ் வழங்கப்படுவதை நாம் எடுத்துக் காட்டாகக் கொள்ளவேண்டும்.

உலகம் ஒரு கழனி, வயல்; அதில் (காந்தியின் சத்தியசோதனை) மெய்ம்மை என்ற பயிர் செய்யவேண்டும், அறிவினால் உழவு; விருப்பம் விதை, பயிரின் ஊடேகளை தோன்றுமே, அதுதான் பொய்ம்மை (வாழ்வாவது மாயம்) மாயை, உலக வாழ்வே பொய் அழியக்கூடியது என்று உணர்தல், அதைக் களையவேண்டும்; தண்ணீர் பொறுமை, பிறகு, தனது பண்பாடு, உணர்வு இவைகளை அறிவது அறிந்து கடைப்பிடித்து ஒழுகுவது வேலி, முடிவில் விளைவு சிவகதி 'இறைத்தன்மை'.

இக்கருத்தை தமிழை மறுக்கிறவர்களிடம் அவர்களின், மனத்தில் உறைக்கும்படிச் சொல்லவேண்டும். மற்றும் அவர்களுக்கு உணர்த்த வேண்டியவை; "கோவில்களு செல்லவேண்டா; நமது உடல் தான் கோவில்; ஆ கோவிலில் உள்ள இறை (அல்லது) கடவுள். நம்மை ந ஆய்ந்து பார்க்க வேண்டும். அதற்கு அரசயோகப் பயி செய்தால் போதும். நாள்தோறும் காலை, மாலை ஊ (தியானம்) செய்யுங்கள் என்று சொல்லி மக்க ஈர்க்கின்ற இயக்கங்கள், தற்காலம் தோன்றி வருகின் இதனால் மக்கள் கோவிலில் சென்று வழிபடுதல் குறை வரும்.

2. தினசரி வாழ்க்கையில் அலுப்புத்தட்டி நேரத்தில் மாற்றாக ஒரு பொழுதுபோக்கு வேண் ஒளிப்படம் பார்க்கச் செல்வதுபோலத் திருவிழாக் கா களில் கோவில் செல்வோர் பலர், நாள்தோறும் அவ செல்வதில்லை. அவர்களும் ' தெரியாத மொழியில் 'மந்தி என்று சொல்லி உளறுகின்றனர். காசு பறிக்க" எ எண்ணவும் வாய்விட்டுச் சொல்லவும் செய்கிறார் தெரிந்த மொழியில் சொல்வதை அவர்கள் விரும்புகிறார் என்பது தெரிகிறது.

3. அறிவியல் வளர்ந்து வரும் இக்காலத் இறை நம்பிக்கைக் குறைந்து வருவதை அறியச் செ வேண்டும்.

4. தமிழ்ப் பேறறிஞர்கள் நல்முருகேச முதலியார் (ஓ.இ.ஆ.ப.,) வி.ஆறுமுகம் (இ.ஆ.ப) கி.ஆ.பெ.விசுவநாதன் மற்றும் பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் ஆகியோர், திரு வி. க. போன்றவர்கள், மு. வ. முதலியோரும் கோவில் களில் தமிழ் வழங்கபபட வேண்டும் என்பதை வற்புறுத்தியே யுள்ளனர். அதற்கான நூல்களையும் வெளியிட்டுள்ளனர்.

எந்த விதத்திலும், கோவில் குருக்கள் (தென் கலையைப்போல) தமிழ்ச் சொற்களை மந்திரமாகக்

கொண்டு பூசை செய்ய மறுப்பார்களேயானால், அரசை அணுகி அதற்கு ஆவன செய்ய வற்புறுத்த வேண்டும். மற்றும் கோவில் நிலங்களை உழுது பயிரிடுபவர்களிடம் சென்று 'உங்கள் உழைப்பு இறைவனுக்குச் செல்லவில்லை. இடைத்தரகர்களை வாழ வைக்கிறது' எனச் சொல்லி கோவில் வருவாயைக் குறைக்க வழிகாணமுடியும்.

"ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று அலையும் அறிவிலிகாள், பல்லாயிரம் வேதங்கள் அறிவு ஒன்றே தெய்வம் ஒன்று உண்டென்று சொல்வதை அறியீரோ"

— பாரதியார்

ஆகவே அறிவுபெறக் கல்வி, கல்வி கற்க மொழி; மொழி மூலம் கல்வி; கல்வி மூலம் அறிவைப் பெறுக; அறிவு மூலம் மெய்ம்மையை அறிக. தாய்மொழி (தமிழ்) இல்லாத இடத்தில் அம்மொழியை வழங்வோம்.

அகச்சான்று

திருக்கோவில்களில் தீந்தமிழே வழிபாட்டு மொழியாக இருக்கமுடியும் என்பதற்கான அகச் சான்றுகளைப் பார்ப்போம்.

1. மற்றுநீ வன்மை பேசி வன்றொண்டன் என்னும் நாமம் பெற்றனை! நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க அருச்சனைப் பாட்டே ஆகும்; ஆதலால் மணமேவ் நம்மைச் சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்.

— தெய்வச் சேக்கிழார்.

2. தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை உண்ட பாலனை அழைத்ததும், எலும்பைப் பெண்ணுருவாய்க்கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததும், கன்னித் தண்டமிழ்ச் சொல்லோ? மறுபுலச் சொற்களோ? சாற்றீர்!

— திருவருணைக் கலம்பகம்

திருக்கோவில் தமிழ்ச்சொற்கள்

வடமொழி - தமிழ்மொழி	வடமொழி - தமிழ்மொழி
தேவத்தானம் - திருக்கோவில்	வைகாசி - விடை
துவசம் - கொடி	ஆனி - ஆடவை
துவசத்தம்பம் - கொடிமரம்	ஆடி - கடகம்
துவசாரோகணம் - கொடியேற்றம்	ஆவணி - மடங்கல்
கர்ப்பகிரகம் - கருவறை	புரட்டாசி - கன்னி
பிரவேசம் - நுழைவு	ஐப்பசி - துலை
சுவாமி - இறை, கடவுள்	கார்த்திகை - நளி
உற்சவம் - திருவிழா	மார்கழி - சிலை
மகோற்சவம - பெருந்திருவிா	தை - சுறவம்
சந்நிதி - திருமுன்	மாசி - கும்பம
தீபம் - ஒளி	பங்குனி - மீனம்
ஆராதனை - வழிபாடு	தினம் - நாள்
அபிசேகம் - திருமுழுக்கு	வாரம - கிழமை
அலங்காரம் - ஒப்பனை	ஆதிவாரம் - ஞாயிற்றுக்கிழமை
நைவேத்தியம - திருவமுது	சோமவாரம் - திங்கள்கிழமை
பிரசாதம் - திருவருட்பொருள்	மங்களவாரம் - செவ்வாய்க்கிழமை
அர்ச்சனை - மலர் வழிபாடு	புதவாரம் - அறிவன்கிழமை
சைவம் - சிவனியம்	குருவாரம் - வியாழக்கிழமை
வைணவம் - மாலியம்	சுக்கிரவாரம் - வெள்ளிக்கிழமை
கும்பாபிசேகம் - குடமுழக்கு	சனிவாரம்-காரிக்கிழமை
சம்புரோட்சணம் - நன்னீராட்டு	திதி - உவா
விபூதி - திருநீறு	பிரதமை ஒருமை
பஞ்சாட்சரம்-ஐந்தெழுத்து	துதியை - இருமை
சிவாயநம - சிவபோற்றி	திருதியை - மும்மை
ஈசுவரன் - பெருந்தேவன்	சதுர்த்தி - நான்மை
ஈஸ்வரி - பெருந்தேவி	பஞ்சமி - ஐம்மை
வருசம் - ஆண்டு	சட்டி - அறுமை
மாசம் - மாதம்	சப்தமி - எழுமை
சித்திரை - மேழம்	அட்டமி - எண்மை
	நவமி - தொண்மை